ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:
ஸ்ரீமதே க்ருஷ்ணஸூரயே நம:
ஸ்ரீமத் வரவரமுநயே நம:

பரமகாருணிகரும் வியாக்கியான சக்ரவர்த்தியுமான

ஸ்ரீ பெரியவாச்சான் பிள்ளையருளிய

ரஹஸ்ய நூல்கள்

திருச்சங்கநல்லூரில் எழுந்தருளியிருக்கும்
அவதாரஸ்தல ஸந்நிதி ஜீர்ணோத்தாரண மஹாஸம்ப்ரோக்ஷண
மஹோத்ஸவத்தில் வெளியிடப்பட்டது

பதிப்பாசிரியர்:
ஸ்ரீ உ. வே. வித்வான் அஷ்டகோத்ரம் வேங்கடாசாரியார்
தில்லைத்திருச்சித்திரகூடம்

இராக்ஷஸ, தை, 12ம் நாள் (26-1-76)

பதிப்புரை

தெள்ளியதாவுரை செய்நம்பிள்ளையின் சீடரும் வியாக்கியான சக்ரவர்த்தி என்று குலாவப்படுபவருமான பெரியவாச்சான் பிள்ளையின் பெருமை ஈடு இணையற்றது. ஆழ்வார்களின் அருளிச்செயல்களனைத்துக்கும் உரைசெய்த தல்லாமல் ஸ்ரீராமாயணத்தின் முக்கியமான சுலோகங்கள், ஸ்தோத்ரரத்னம் இவைகளுக்கும் உரைசெய்தவர் இப்பேராசிரியர். இவ்வருமையின் சீர்மையை ஸ்ரீராமாயணத்திற்கு உரை எழுத அப்பைய தீட்சிதரை சிலர் வேண்டியபோது "சோழியன் உமிழ்ந்த சக்கைதான் உளது" என்று கூறியதாக கர்ணபரம்பரை யாக வழங்கப்படுவதிலிருந்து அறியலாம். இவருரைகளிலிருந்து இவர் பல துறைகளில் ஒப்புயர்வற்ற புலமை பெற்றிருந்தார் என்பது வெள்ளிடைமலை. எம்பெருமானார் தரிசனத்துக்கு விளக்கமாக இவ்வாசிரியரருளிய சில ரஹஸ்ய (ஆழ்ந்த பொருட்கொண்ட) நூல்கள், பின்வந்த ஸ்ரீவசனபூஷணம், தத்வத்ரயம் முதலிய மற்றைய ஆசிரியர்களின் நூல்களுக்குச்சிறந்த முன்னேடிகளாயமைந் தும் இவை அதிகமாகப் பிரசாரத்திலில்லை. இந்நூல்களில் சிலவற்றை இவ் வாசிரியரின் திருக்கோயிலின் குடமுழுக்கு விழாவின்போது மாணவ நண்பர் களால் பதிப்பித்து வழங்குவதில் பெருமையடைகிறோம்.

இராக்ஷஸ, தை, 12ம் நாள்

திருப்பணிக் குழுவினர்

பெரியவாச்சான் பிள்ளையின் தனியன்:

ஸ்ரீமத் க்ருஷ்ண ஸமாஹ்வாய நமோ யாமுநஸூநவே |
யத் கடாக்ஷைக லக்ஷ்யாணாம் ஸுலப: ஸ்ரீதரஸ்ஸதா ||

திருநக்ஷத்திரத் தனியன்:

ஸகல த்ராவிடாம்நாய ஸார வ்யாக்யான காரிணம் |
ச்ராவணே ரோஹிணீஜாதம் க்ருஷ்ண ஸம்ஜ்ஞமஹம் பஜே ||

வாழி திருநாமம்:

தண்மை சிங்கம் உரோகிணி நாள் தழைக்கவந்தோன் வாழியே
தாரணியில் சங்கநல்லூர் தானுடையோன் வாழியே
புன்மைதவிர் திருவரங்கர் புகழுரைப்போன் வாழியே
பூதூர் எதிராசர்தாள் புகழுமவன் வாழியே
மன்னுபுகழ் சடகோபர் வனமுரைப்போன் வாழியே
மறைநான்கின் பொருள்தன்னைப் பகுத்துரைத்தோன் வாழியே
அன்புடன் உலகாரியர்தம் அடிபணிந்தோன் வாழியே
அபயப்ரத ராசர்தாள் அநவரதம் வாழியே,

பெரியவாச்சான் பிள்ளையின் பெருமை:

பிள்ளான் நஞ்சீயர் பெரியவாச்சான் பிள்ளை
தெள்ளார் வடக்குத் திருவீதிப் பிள்ளை
மணவாளயோகி திருவாய் மொழியைக் காத்த
குணவாள ரென்று நெஞ்சே கூறு.

நம்பிள்ளை தம்முடைய நல்லருளாலேவியிட
பின் பெரியவாச்சான் பிள்ளையதனால், இன்பா
வருபத்தி மாறன் மறைப்பொருளைச் சொன்னது
இருபத்து நாலாயிரம்.

பெரியவாச்சான் பிள்ளை பின்புள்ளவைக்கும்
தெரிய, வியாக்கியைகள் செய்வால், அரிய
அருளிச் செயற்பொருளை ஆரியர்கட்கிப்போது
அருளிச் செயலாய்த்து அறிந்து.

(மணவாள மாமுனிகளின் உபதேச
ரத்தினமாலை, 39, 43, 46)

அபயப்ரத நாமாநம் அஸ்மத்குரும் அஹம்பஜே |
யத்கடாக்ஷாதயம் ஜந்து: அபுநர் ஜன்மதாம் கத: ||

(வாதிகேசரி அழகிய மணவாளச்சீயர்)

கோயில் கந்தாடைநாயன் அருளிச்செய்த
“பெரிய திருமுடியடைவு”
என்ற நூலிலிருந்து

பெரியவாச்சான் பிள்ளைக்குத் திருவவதாரஸ்தலம் சோழ மண்டலத்தில் சங்கநல்லூர். திருநக்ஷத்திரம்: ஸர்வஜித் வருஷம் ஆவணிமாதம் க்ருஷ்ணாஷ்டமி ரோகிணீ. குலம் பூர்வசிகை. குடி சங்கநல்லூர். திருத்தகப்பனார் யாமுனதேசிகர். திருத்தாயார் நாச்சியாரம்மன். திருநாமங்கள்: பெரியவாச்சான் பிள்ளை, அபயப்ரதராஜர், ஸ்ரீமத் க்ருஷ்ணர். ஆசார்யர் நம்பிள்ளை. திருவாராதனம் க்ருஷ்ணவிக்ரஹம். இருப்பிடம் கோயில். இவர் செய்தருளிய க்ரந்தங்கள்: திருவாய்மொழி வியாக்கியானம் இருபத்துநாலாயிரம், மற்ற ப்ரபந்தங்களுக்கு வியாக்கியானங்கள், பரந்தரஹஸ்ய விவரணம், மாணிக்கமாலை, நவரத்னமாலை, ஸகல ப்ரமாணதாத்பர்யம், உபகாரரத்னம், கத்யத்ரய வியாக்கியானம், ஆளவந்தார் ஸ்தோத்ரவியாக்கியானம், அபய ப்ரதானவியாக்கியானம், சரமரஹஸ்யம், அநுஸந்தான ரஹஸ்யம், நிகமனப்படி.* இவர் தொண்ணூற்றைந்து திருநக்ஷத்ரம் எழுந்தருளியிருந்தார். இவர் க்ருஷ்ணனுடைய திருநக்ஷத்திரத்திலே திருவவதாரம். இவர் சிஷ்யர் திரு மருமகனாராய் தத்தபுத்ரரான நாயனாராச்சான் பிள்ளை, பரகாலதாஸர், பின்பழகிய பெருமாள்சீயர், ஸ்ரீரங்காசாரியர் முதலானவர்கள்.

கலிஜித்தாஸதாஸாய காருண்யைக மூர்த்தயே |
அபயப்ரதராஜாய அஸ்து ஸ்ரீரஸ்து மங்களம் ||

---

* இப்பதிப்பில் வெளியிடப்படும் ரஹஸ்யத்ரய தீபிகை, ரஹஸ்ய த்ரயவிவரணம் இங்கு விடப்பட்டுள்ளன.

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

பெரியவாச்சான்பிள்ளை அருளிச்செய்த

மாணிக்கமாலை

''தைவாதீநம் ஜகத் ஸர்வம் மந்த்ராதீநந்து தைவதம், தந்மந்த்ரம் ப்ராஹ்மணாதீநம் தஸ்மாத் ப்ராஹ்மணதைவதம்'' என்கிறபடியே உபயவிபூதியும் ஈச்வரனிட்ட வழக்காயிருக்கும். ஈச்வரன் திருமந்த்ரம் இட்ட வழக்காயிருக்கும். திருமந்த்ரம் ஆசார்யனிட்ட வழக்காயிருக்கும். ஆகையாலே, உபயவிபூதிக்கும் நிர்வாஹகனான ஈச்வரனும் அவனை ப்ரதிபாதிக்கிற திருமந்த்ரமும் ஆசார்யனிட்ட வழக்காகையாலே திருமந்த்ரத்தால் பிரதிபாதிக்கிற ப்ராப்ய ப்ராபகங்களிரண்டும் ஆசார்யனாலே என்னத் தட்டில்லை.

ஆசார்யனாவான்: ''ஆசார்யோ வேதஸம்பந்நோ விஷ்ணுபக்தோ விமத்ஸர:, மந்த்ரஜ்ஞோ மந்த்ரபக்தச்ச ஸதா மந்த்ராச்ரயச் சுசி:'' ''குருபக்திஸமாயுக்த: புராணஜ்ஞோ விசேஷத:, ஏவம் லக்ஷணஸம்பந்நோ குருரித்யபிதீயதே.'' என்கிறபடியே வைதிகாக்ரேஸரனாய், பகவத்பக்தியுக்தனாய், மாத்ஸர்யவியுக்தனாய், ஸகலவேதஸார பூதமாய் ஸகலமந்த்ரங்களுக்கும் காரணமாய் இரண்டுபங்குக்கு ஒரு கையோலை போலே எம்பெருமானோடு இவ்வாத்மாவுக்கு உண்டான அவிநா பூதஸம்பந்தத்தைக் காட்டக் கடவதாய் முமுக்ஷுவுக்கு எய்ப்பினில் வைப்பான திருமந்த்ரத்தை பக்திச்ரத்தைகளோடே அர்த்தஸஹிதமாக அநுஸந்தித்துப் பெரிய மதிப்பனாய், அர்த்தகாமோபஹதனன்றிக்கே லோகபரிக்ரஹம் உடையவனாயிருப்பானொருவன் ஆசார்யனாகக்கடவன்.

கூரத்தாழ்வான் எம்பெருமானார் திருவுள்ளத்திலே சீறியருளினாரென்று கேட்டு ''இவ்வாத்மா அவருக்கே சேஷமாயிருந்ததாகில் அவருடைய இஷ்டவிநியோகப்ரகாரம் கொண்டு கார்யமென்'' என்றார். தன்னை ஆச்ரயித்து வைத்துத் தன் திறத்திலே தீங்கு நினைத்து த்ரோஹியான நாலூரானைப் பெருமாள் ''ந க்ஷமாமி'' என்று முனிந்தருள, பெருமாளோடே எதிரிட்டு ''அவன் நான் பெற்றலோகம் பெறவேணும்'' என்று

விண்ணப்பம் செய்தார். ஆக, இவ்விரண்டர்த்தத்தாலும் சிஷ்யாசார்யக்ரமத்துக்கு ஸீமாபூமி கூரத்தாழ்வானென்று அருளிச்செய்வர். வடுகநம்பி "ஆசார்யபதமென்று தனியே ஒரு பதம்; அதுள்ளது எம்பெருமானாருக்கேயாயிற்று; ஆகையால் எம்பெருமானார் திருவடிகளே சரணமென்று விச்வஸித்திருங்கோள்" என்றாயிற்று, தம்முடைய சிஷ்யர்களுக்கு அருளிச்செய்வது.

நல்லடிக் காலத்தில் நம்மாசார்யர்கள் அதிகாரிகளைப் பெற்றாலல்லது பகவத் ஸம்பந்தம் இருக்கும்படி சொல்லக்கடவதாயிராது. அதிகாரிகளாவார்: கருந்தரையில் தாங்கள் நின்ற நிலையை அநுஸந்தித்து "இங்நின்ற நீர்மையினியாமுறாமை" என்றும், இன்றொடு நாளை யென்றே எத்தனை காலமும் போய்க்கிறிப்பட்டேன்" என்றும், "ஏஹி பச்ய சரீராணி" என்றும் "இன்னம் கெடுப்பாயோ" என்றும் "இவையென்ன உலகியற்கை" என்றும் "நாட்டுமானிடத்தோடெனக்கரிது" என்றும், "நாட்டாரோடியல்வொழிந்து" என்றும் "ஓ! ஓ! உலகினதியல்வே" என்றும், கூவி வெருவி இந் நிலத்திற்பொருந்தாமை தோற்றத் துவண்ட சேதனனுக்காயிற்று பகவத்ஸம்பந்தம் சொல்லுவது. அங்ஙனன்றிக்கே, வாய்க்கரையிலே பொரிபுறந்தடவின ஆநுகூல்யம் கண்டாதல், த்யாஜ்யமான அர்த்தகாமங்களிலே நசையாலேயாதல், நிலை நில்லாத ஒரு ப்ரபாவத்தை நச்சியாதல், ஒன்றாலே வந்ததுவும் துவட்சியில்லாக் கழனிமுண்டர்க்கு ஒரு நல்வார்த்தை சொன்னானாகில் தன் மதிப்பும் கெட்டு, தன் கூற்றிலே ஒதுங்கின பகவத்ப்ராப்தியும் நழுவவிட முடிந்தது, கேட்கிறவனையும் நாஸ்திகனாக்குகிறானித்தனை.

ஆசார்யபேதமும் ஆத்மபேதத்தோபாதி. பிதாவை, மாதுலனை, மாமனாரை, ஸாவித்ர்யுபதேசம் பண்ணினவனை, அத்யயனம் பண்ணுவித்தவனை, ஒரு மந்த்ரம் உபதேசித்தவனை, பகவந்மந்த்ரம் உபதேசித்தவனை இப்படி ஆராய்ந்து பார்த்தால் அனேகராயிருப்பார்கள். இவர்களடைய முமுக்ஷுக்களுக்கு த்யாஜ்யர்கள். "இதுவென்? பகவந்மத்ரம் சொல்லுவித்தவனையும் அப்படிச் சொல்லலாமோ?" என்னில்: பகவதவதாரங்களும் பகவத்குணங்களும் எல்லையை என்றும் இறந்திருக்கும். பகவதவதாரங்கள்தோறும் பகவத்குணங்கள்தோறும் திவ்யசேஷ்டிதங்கள்தோறும் திருமந்த்ரங்களும் உளவாயிருக்கும். ஸம்ஸாரத்தில் ஸ்த்ரீபுமான்கள் ஸம்ச்லேஷவிச்லேஷரூபமான ஸ்ரீகோபாலமந்த்ரத்தை உபதேசிப்பாரும், புத்ரப்ரதமான மந்த்ரத்தை உபதேசிப்பாரும், ஐச்வர்யமென்ன, ஆரோக்யமென்ன, விஜயார்த்தமென்ன, சத்ருநிரஸனமென்ன, இவற்றுக்குத் தக்க மந்த்ரங்களையும் உபதேசிப்பாரெல்லாம் ஸம்ஸாரத்தை அர்த்திப்பார்களாகையாலே ஆசார்யர்களாக மாட்டார்கள். இவ்வர்த்தம் திருமந்த்ரத்தைக் குறித்தன்று; விநியோகம்கொள்ளுகிற சேதனனுடைய நினைவைப்பற்ற. விபரீதஸ்பர்ச

முடைய எம்பெருமான், 'நீசஸ்பர்சமுடைய மந்த்ரம், நீசஸ்பர்சமுடைய ஆசார்யன் இவர்களுடைய முமுக்ஷுக்களுக்கு த்யாஜ்யர்கள், விபரீதஸ்பர்சமுடைய எம்பெருமானுவான்:— இதரதேவாலயங்களில் இருக்குமவன். நீசஸ்பர்சமுடைய மந்த்ரமாவது:— பகவத்பாகவதகைங்கர்யப்ராப்திக்கு அவ்வருகுண்டான ஆபாஸங்களுடையச் சொல்லுமது. நீசஸ்பர்சமுடைய ஆசார்யனுவான்:— இதுக்குப் புறம்பு சில ஸம்ஸாரத்தில் மினுக்கங்களைத் தோன்றச் சொல்லுமவன்.

இனி, ஆசார்யன் ஆரென்னில்: பகவத்ப்ராப்திக்கு ப்ரதிபந்தகமான ஸ்வவ்யாபார நிவ்ருத்திரூபமான ப்ரபத்தியை உபதேசிக்கிறவன் ஆசார்யனுவான்; "ச்ரிய: பதியான எம்பெருமானையே ரக்ஷகனென்று விச்வஸித்து நிர்ப்பரனுயிரும்" என்று அருளிச்செய்யுமவன். ஸதாசார்யன் ஸச்சிஷ்யனை பகவத்ப்ரஸாதத்தாலே திருந்தின ஸ்ரீவைஷ்ணவனென்று மிகவும் ஆதரித்துக்கொண்டு போரும். ஸச்சிஷ்யனும் ஸதாசார்யனுடைய ஆதரத்தைக்கண்டு இறுமாவாதே தன் கருந்தரையை உணர்ந்து "பகவத்விமுகனுய் சப்தாதிவிஷயங்களிலே மண்டி உருமாய்ந்து கைகழிந்து நின்ற என்னை முதலடியிலே அத்வேஷம் பற்றுசாகக் கொண்டு தன்னுடைய நிரவதிகக்ருபையாலே ரக்ஷித்தருளின மஹோபகாரகன்" என்றும் "ஆசார்யனுலே இப்பேறுபெற்றேன்" என்றும் "என்னைத் தீமனங்கெடுத்தாய்" "மருவித்தொழூம் மனமே தந்தாய்" என்றும் "உனக்கென் செய்கேன்" என்றும் ஆசார்யன் பண்ணின மஹோபகாரத்துக்கு ப்ரத்யுபகாரம் தேடிக் காணுமல் தடுமாறி "**குருரேவ பரம் ப்ரஹ்ம குருரேவ பரா கதி:, குருரேவ பரா வித்யா குருரேவபரம் தநம், குருரேவ பர: காம: குருரேவபாராயணம், யஸ்மாத் ததுபதேஷ்டாஸௌ தஸ்மாத் குருதரோ குரு:**" என்கிறபடியே இஹபர லோகங்களிரண்டும் ஆசார்யன் திருவடிகளே என்றும் த்ருஷ்டாத்ருஷ்டங்களிரண்டும் அவனே என்றும் நினைத்திருக்கும். ஆசாயன் சிஷ்யனுடைய ஹிதத்தைச் செய்யுமவன்; சிஷ்யன் ஆசார்யனுடைய ப்ரியத்தைச் செய்யுமவன். "ஆசார்யன் சிஷ்யனுடைய ஆத்ம யாத்ரையைத் தனக்கு தேஹயாத்ரையாக நினைத்திருக்கும்" என்று விச்வஸித்திருக்கிறதற்கு மேலில்லை. சிஷ்யனும் அப்படியே ஆசார்யனுடைய தேஹயாத்ரையைத் தனக்கு ஆத்மயாத்ரையாக நினைத்திருக்கும். ஆசார்யனுவான், சிஷ்யனுடைய உயிரை நோக்கும். சிஷ்யன் ஆசார்யனுடம்பை நோக்கும். சிஷ்யவஸ்துவை ஆசார்யன் விநியோகம் கொள்ளக் கடவனல்லன். "சிஷ்யவஸ்துவை விநியோகம் கொள்ளுகிறுன்" என்றிருக்கும் ஆசார்யனுடைய அறிவையும் சங்கிக்க அடுக்கும். ஆசார்யனுக்குத் தன்வஸ்துவை உபகரிக்கிறேன் என்றிருக்கும் சிஷ்யனுடைய அறிவையும் சங்கிக்க அடுக்கும். "**சரீரமர்த்தம் ப்ராணஞ்ச ஸத்குருப்யோநிவேதயேத்**" என்றும் உற்று எண்ணில்

"அதுவுமற்றுங்கவன்றனது" என்றும் சிஷ்யனுக்கு ப்ரதிபத்தியாகையாலும், இந்த ருசியை விளைப்பித்தான் ஆசார்யனாகையாலும் ஆசார்யனுக்கும் சிஷ்யனுக்கும் ஒரு நினைவேயாகவேணும். ஆசார்யன் பொறைக்கு இலக்கான சிஷ்யனுக்கு பகவத்ஜ்ஞானமே கைவந்ததென்ன ஒண்ணாது. ஆசார்யன் கண்வட்டத்தில் வர்த்திக்கிற ஸச்சிஷ்யனுக்கும் ஆசார்யன் ப்ரியமே செய்கையாலே கோபத்துக்கு ஹேதுவில்லை. ஆகையால் ஆசார்யன் பொறை குமரிருந்து போமித்தனை. ஆசார்யன் அர்த்த காமங்களில் நசையற்றவனாகை யாலே த்யாஜ்யமான அர்த்தகாமங்கள் ஹேதுவாகப் பொறுக்கவும் வெறுக்கவும் ப்ராப்தியில்லை. இனி இவனுடைய ஹிதரூபமாக வெறுத்தானாகிலும் அதுவும் ப்ராப் யாந்தர்க்கதமாகக்கடவது.

மட்டியூராங்கத்தானும், மணிநைமோசைப்பிள்ளானும், பெற்றியும், நஞ்சீயரு மாக எழுந்தருளியிருக்கச்செய்தே, நஞ்சீயரைப் பார்த்து "ஒரு வைஷ்ணவன் ஓராசார் யன் ஸ்ரீபாதத்திலே பகவத்ஸம்பந்தத்தைப் பண்ணி வேறோராசார்யன் ஸ்ரீபாதத்திலே ஸ்வரூப சிக்ஷையாயிருந்தது. இருவர் பக்கலிலும் இவன் அநுவர்த்திக்கும்படி எங் ஙனே?" என்று விண்ணப்பஞ்செய்ய "ஆசைத்தான் நீர் விடப்பார்க்கிறீர்? முற்படக் கருந்தரையிலே ஒரு நல்வார்த்தையைச் சொல்லுமவர் 'ச்ரிய:பதியான எம்பெருமா னுடைய திருவடிகளையே விச்வஸித்து நிர்ப்பரனாயிரும்' என்று அருளிச்செய்யுமவர்.
49 பின்பு அவனைக்குறித்து ஒரு நல்வார்த்தை சொல்லுமவன் 'நீரார் ஸ்ரீபாதத்திலே உடையார்?' என்று கேட்டு இவனை ரக்ஷித்த ஆசார்யனுக்கு ஒரு ப்ரியம் செய்தானு மாய், இவன் ஹிதத்தின் மேலெல்லை நிலத்தைப் பிடித்து 'உன் ஆசார்யன் திருவடி களையே விச்வஸித்து நிர்ப்பரனாயிரும்' என்றொயிற்று வார்த்தை சொல்லுவது. ஆகை 50
யால் இருவரும் உபாதேயதமர்" என்று அருளிச்செய்தார்! "ஏகாக்ஷரப்ரதாதாரம் ஆசார்யம் யோவமந்யதே, ச்வாநயோநிசதம் ப்ராப்ய சண்டாளேஷ்வபிஜாயதே', என்னக்கடவதிறே. "முமுக்ஷுக்களுக்கு மாதாபிதாக்கள் ஆர்?" என்று கேட்க "சரீரமேவ மாதாபிதரௌ ஜநயத:" என்கிற மாதாபிதாக்களும், 'த்வம் மாதா ஸர்வ லோகாநாம் தேவதேவோ ஹரி: பிதா' 'பிதா மாதா ச மாதவ:- என்று பொதுவான மதாபிதாக்களும் இவனுக்கன்று, அவர்களுமல்ல. இனியாரென்னில், திருமந்த்ரம் மாதாவாயும் பிதா ஆசார்யனும்" என்று அருளிச்செய்வர். இத்தை நினைத்திறே நஞ்சீயரை அனந்தாழ்வான் "திருமந்த்ரத்திலே பிறந்து த்வயத்திலே வளர்ந்து த்வய நிஷ்டராவீர்" என்று வாழ்த்திற்றும். "உத்பாதகப்ரஹ்மபித்ரோ: கரீயாந் ப்ரஹ்மத: பிதா" என்றும் உண்டு.

"முமுக்ஷுக்களுக்கு ஸம்ஸாரத்திலே இருக்கும் நாள் உசாத்துணையார்? பொழுது போம்படி என்?" என்று நஞ்சீயரைப் பிள்ளைகேட்க, "முமுக்ஷுவென்று

ஒரு ஜாதியன்று; ஒரு ஆச்ரமமன்று; மோக்ஷத்திலே இச்சையுடையவனை முமுக்ஷுவென்றதித்தனை; இவனுக்கு உசாத்துணையும் இவனோடே சேர்ந்து போதுபோக்குமுள்ளதும் விரஜைக்கு அக்கரையிலே போனாலிறே. இவ்விருப்பிலே ஓராசையுடையவனுக்கன்றோ துணைவேண்டுவதும் போதுபோக்குமுள்ளதும். இருக்கும் நாள் பிராட்டிக்கு லங்கையில் உசாத்துணையுண்டாகில் இவனுக்கும் ஸம்ஸாரத்தில் துணையுண்டு. அறிவு நடையாடின முமுக்ஷுவுக்கு ஸம்ஸாரம் பிராட்டிக்கு லங்கையோபாதியிறே. அவளுக்கு ராவணன் அபிமானித்த அசோகவனிகையோபாதி, இவனுக்கு இவ்வுடம்பு. அவளுக்கு மாரீசனுடைய தோற்றரவோபாதி இவனுக்கு விஷயப்ராவண்யம். 'அகற்ற நீ வைத்த மாயவல்லைம்புலன்கள்' என்னக் கடவதிறே. அவளுக்கு ராவணன் தோற்றரவோபாதி இவனுக்கு ஸம்ஸாரத்தின் தோற்றரவு. அவளுக்குத் தர்ஜனபர்த்ஸனாதிகளைப்பண்ணும் ராக்ஷஸிகளோபாதி இவனுக்குப் புத்ரமித்ராதிகள். ஏகாக்ஷி, ஏககர்ணிகைகளோபாதி இவனுக்கு அஹங்காரமமகாரங்கள். அவளுக்கு ஸ்ரீவிபீஷணாழ்வானும் பெண்மகளும் போலவே இவனுக்கு ஸ்ரீவைஷ்ணவர்கள் உசாத்துணையாயிருக்கும்படி. அவளுக்குத் திருவடி தோற்றரவோபாதி இவனுக்கு ஆசார்யன் தோற்றரவும். அவளுக்குத் திருவடி வர்ஷித்த ஸ்ரீராமகுணங்களோபாதி இவனுக்கு ஆழ்வார்கள் அருளிச் செயல்களும், ஸ்ரீராமாயணமஹாபாரதாதிபகவத்கதைகளும். அவளுக்குத் திருவடி கொடுத்த திருவாழி மோதிரத்தோபாதி இவனுக்கு ஆசார்யன் திருவுள்ளமான திருமந்த்ரம். அவளுக்குத் திருவாழி மோதிரம் சாற்றின மணிவிரலை நினைப்பது, அணைத்த திருத்தோளை நினைப்பது, அவ்வழியாலே திருமேனியை முழுக்க நினைப்பதாய் இலங்கையில் தனியிருப்பையும் மதியாதே பெருமாளோடே ஒரு படுக்கையிலே இருந்தாற்போலே இவன் திருமந்த்ரத்தில் ப்ரதமாக்ஷரத்தில் சொல்லுகிற ரக்ஷகத்வசேஷித்வங்களை நினைத்து அந்த ரக்ஷகத்வசேஷித்வங்களுக்கு இடைச்சுவரான அந்யசேஷத்வஸ்வஸ்வாதந்த்ர்யநிஷேதத்தைப் பண்ணித் தன்னை அநந்யார்ஹசேஷமாக்கின அவதாரணத்தை நினையா, அவ்வநந்யார்ஹசேஷவஸ்துவுக்கு உஜ்ஜீவனம் நிருபாதிகசேஷியானவனுக்குக் கிஞ்சித்கரிக்கையென்கிற அர்த்தத்தைக் காட்டும் நாராயண பதத்தை நினையா, இப்படித் திருமந்த்ரத்தில் அர்த்தாநுஸந்தானத்தாலே ஸம்ஸாரத்தில் இருப்பையும் மதியாதே பாமருமருவுலகத்துள்ளே தெளிவுற்ற சிந்தையராய் வர்த்திப்பர்கள். பிராட்டிக்கு லங்கையிலே பொழுதுபோக்கு போலே முமுக்ஷுவுக்கு ஸம்ஸாரத்திலே பொழுதுபோக்கு. ஸம்ஸாரிகளிற்காட்டில் முமுக்ஷுவுக்கு*. லங்கையிலுள்ளார், தன்னிலமான வாசி தோன்ற உண்பாருறங்குவாராய், ப்ரவ்ருத்திநிவ்ருத்திகளோடே போதுபோக்காய், பிராட்டி ஊணுமுறக்கமுமின்றிக்கே, பத்துக்கோடி செந்நாய்க்கு

* இவ்விடத்தில் சில வார்த்தைகள் விட்டுப்போயிருக்கின்றன.

நடுவே ஒரு மான் பேடை இருந்தாற்போலே, பெருமாள் தோள் வீரத்தை அநுஸந்தித்து, அவ்வீரத்துக்கு ஒரு இறையான ப்ரவ்ருத்தி நிவ்ருத்திகளுக்கு க்ஷமையின்றிக்கே தரும்பு நறுக்காதே இருந்தாற்போலே முமுக்ஷுவுக்கும் "உண்ணுநாள் பசியாவதொன்றில்லை" என்றும், "நாட்டு மானிடத்தோடெனக்கரிது" என்றும், "நாட்டாரோடியல்வொழிந்து" என்றும், "கூவிக்கொள்ளும் காலம் இன்னம் குறுகாதோ" என்றுமிருக்கை. ஸம்ஸாரிகளுக்கு வாஸஸ்தானம் ஒரு க்ராமமாத்ரமாய், ஆச்ரயம் க்ஷேத்ரஜ்ஞனாயிருப்பானோர் எலியெலும்பனாய், ப்ரயோஜனமும் வயிறு வளர்க்கையாயிருக்கும். முமுக்ஷுவுக்கு இருப்பிடம் எம்பெருமானேயாய், ஆச்ரயம் எம்பெருமானேயாய், ப்ரயோஜனமும் கைங்கர்யமேயாயிருக்கும். "வைத்த பரிசிது காண்மின்" என்று இந்நிலத்துப் பொருந்தாமையும், பொருந்தின நிலத்தில் புகப்பெறுமையும் வடிவிலே தோற்றும்படியாய் கண்கள் அறிம்பொழுக "நினைந்திருந்தே சிரமம் தீர்ந்தேன்" என்றிருப்பர்கள்."*

இவ்விருப்பில் பொருந்தாமை விளைப்பித்து இரும்பைப் பொன்னாக்குவாரைப் போலே கருந்தரையிலே புகுந்து பகவத்விஷயத்தை உபகரித்த ஆசார்யனுக்கு சிஷ்யன் பண்ணும் உபகாரமேதென்னில்: ஆசார்யவிஷயீகாரத்துக்கு இவ்வருகு சிஷ்யன் நல்வழிக்கு உறுப்பாக நடக்கும் நடக்கைகளடைய ஆசார்யனுக்கு உபகரித்தானாகவாயிற்று, ஆசார்யன் திருவுள்ளத்தில் அநுஸந்தித்திருக்குமது. அவையாவன:— தன் முன்னடி பார்த்து நடக்கையும்; பிறருடைய குணகுணநிரூபணம் பண்ணுதொழிகையும்; ஸ்வதோஷத்தில் ஸர்வஜ்ஞனாயிருக்கையும்; பரதோஷத்தில் அஜ்ஞனாயிருக்கையும்; அந்யசேஷத்வர், ஸ்வஸ்வாதந்த்ர்யம், தேஹாத்மாபிமானம், ஆத்மஸ்துதி, பரநிந்தை என்கிற எல்லை மயக்குகள் பரிஹரித்து நடக்கையும்; எம்பெருமானுடைய வாய் புகு சோற்றைப் பறியாதொழிகையும்; அதாவது: எம்பெருமானுடைய வகுத்த ரக்ஷகத்வத்தைத் தான் தனக்கு ரக்ஷகனென்றிருக்கை; ஆசார்யனையும், திருமந்ரத்தையும், எம்பெருமானையும், அவமானம் பண்ணுதொழிகையும்; ஆசார்யனை அவமானம் பண்ணுகையாவது:- தன் முன்னடி பார்த்து நடவாதொழிகையும், அவன் அருளிச்செய்த திருமந்த்ரத்தைத் தரையில்லாத்தரையிலே சிந்தி இழக்கையும்; திருமந்த்ரத்தை அவமானம் பண்ணுகையாவது:— திருமந்த்ரத்தை மறக்கையும், திருமந்த்ரம் அருளிச்செய்த ஆசார்யனை அநாதரிக்கையும், திருமந்த்ரத்தால் ப்ரதிபாதிக்கிற அர்த்தத்தின்படி யொழிய அந்யசேஷத்வஸ்வாதந்த்ர்யதேஹாத்மாபிமாநாதிகளிலே மொத்துண்டு கிட்டம் தின்ற மாணிக்கம் போலே உருமாய்ந்து போகையும்; எம்பெருமானை அவ

* என்று நஞ்சீயர் அருளிச் செய்தார் என்று இவ்விடத்தில் கூட்டிக்கொள்வது.

மானம் பண்ணுகையாவது:— அவனுடைய ரக்ஷகத்வத்துக்கு இடைச்சுவரான க்ஷேத்ரஜ்ஞரை ரக்ஷகராக நினைத்து அவர்கள் வாசல்கள்தோறும் நுழைந்து ஸர்வேச்வரனை ஸ்துதிக்கிற நாக்கை இட்டு புரோடாசத்தை நாய்க்கிடுமாப்போலே க்ஷேத்ரஜ்ஞரை ஸ்துதிக்கையும்.

எம்பெருமானுக்கும் ஆத்மாவுக்கும் ப்ராப்தி அவிநாபூதமாயிருக்க புருஷகாரம் வேண்டுவானென்னென்னில்: இருக்கிற ஸம்ஸாரமும், எடுத்த உடம்பும், இந்த ப்ராப்திக்கு இடைச்சுவரான அந்யசேஷத்வஸ்வஸ்வாதந்த்ர்யதேஹாபிமானாதிகளை விளைப்பித்துத் தன்னை மறந்து உருமாயப் பண்ணுகையாலே ஸாபராதனை தன் படியையும், அபராதத்தையும் அறிகைக்கு ஸர்வஜ்ஞனுமாய், அறிந்தபடி அநுபவிப்பிக்கைக்கு ஸர்வசக்தியுமாய், தான் ஸ்வதந்த்ரனுமாயிருக்கையாலே இவன் அபராதத்தைக் கண்டு அழியச்செய்யாமைக்குப் புருஷகாரம் வேணும். ஆனால் பிராட்டிக்கும் எம்பெருமானுக்கும் ப்ராப்தி ஒத்திருக்குமாகில் பிராட்டியைப் புருஷகாரமாகச் சொல்லுவானென்னென்னில்: இருவர்க்கும் இரண்டு குணமுண்டாகையாலே. எம்பெருமானுக்கு ஸ்வஸ்வாதந்த்ர்யமும் நீர்மையுமுண்டு பிராட்டிக்கு வெறும் நீர்மையே வடிவாயிருக்கும். எங்ஙனேயென்னில்: மத்யராத்ரியிலே காதுகரும் கூட இரங்கும்படியான சரணாகதியை முன்னிட்டுக்கொண்டு வந்த ஸ்ரீவிபீஷணாழ்வானையுங்கூட ‘ வத்யதாம் பத்யதாம்'' என்ன ஒரு நிலைநின்று கைக்கொண்டது பெருமாள் ப்ரக்ருதி; தன்னை நலிந்த ராக்ஷஸிகளைத் திருவடி நலியப்புக, பெருமாள் பரிகரமென்று மதியாதே ''ந கச்சிந் நாபராத்யதி'' என்று பிராட்டி ப்ரக்ருதி.

ஆனால் பிராட்டியும் ஆசார்யனும் இரண்டு புருஷகாரம் வேண்டுவானென்னென்னில்: ''சரண்யன் குறையும் சரணாகதன் குறையும் தீர்ந்து இருவர்க்கும் ஸ்வரூபம் பெறுகைக்காக'' என்று அருளிச்செய்தார். குருபரம்பரையை முன்னிடவே சரணாகதன் குறை தீரும். பிராட்டியை முன்னிடவே சரண்யன் குறை தீரும். சரண்யனுக்குக் குறையுண்டோ? என்னில்: நித்யவிபூதி போலே தெளிவிசும்பன்றிக்கே இருள் தருமாஞாலமான ஸம்ஸாரத்திலே வர்த்திக்கிற சேதநனை இந்நிலத்தின் தன்மை பாராதே பிழை எழுதும் ஸ்வாதந்த்ர்யம் சரண்யனுக்குக் குறை. அக்குறை பிராட்டியை முன்னிடவே தீரும். எம்பெருமான் இவ்வாத்மாவைப் பற்றும்போது பிராட்டியையும் ஆசார்யனையும் முன்னிட்டாயிற்றுப் பற்றுவது. ஆத்மா எம்பெருமானைப் பற்றும்போது பிராட்டியையும் ஆசார்யனையும் முன்னிட்டாயிற்றுப் பற்றுவது. இவ்வர்த்தம் இளையபெருமாள், ஸ்ரீவிபீஷணப்பெருமாள். ஸ்ரீகுஹப்பெருமாள், திருவடி மஹாராஜருள்ளிட்டார் பக்கலிலும் காணலாம். எம்பெருமானுக்கு ரக்ஷித்தே ஸ்வரூபம்

பெறவேணும். பிராட்டிக்கு ரக்ஷிப்பித்தே ஸ்வரூபம் பெறவேணும். ஆசார்யனுக்கும் இவ்வர்த்தம் அறிவிப்பித்தே ஸ்வரூபம் பெறவேணும். இவ்வர்த்தமறிந்து அத்யவஸித்த போதே ஸ்வரூபஸித்தி. சேதனனுக்கு அர்த்தகாமத்தில் நசையறவே ஆச்ரமம் நிறம் பெறும். அஹங்காரமமகாரமற வைஷ்ணவத்வம் நிறம் பெறும். இவைதான் பகவத் ப்ராப்திக்கு ப்ரதிபந்தகங்களாயிருக்கும்.

பகவத்ப்ராப்திக்கு ப்ரதிபந்தகமான ஸ்வவ்யாபாரநிவ்ருத்தி ப்ரபத்தி. 'ப்ரபத்தி யாவது, ஒன்றைவிட்டு ஒன்றைப் பற்றுகை' என்று ஆழ்வான் பணிக்கும். அதாவது:— அஜ்ஞனாய், அசக்தனாய், அப்ராப்தனான தன்னை விட்டு ஸர்வஜ்ஞனாய் ஸர்வசக்தியாய் ப்ராப்தனுமான எம்பெருமானைப் பற்றுகை. ப்ரபத்திக்கு ஸ்வரூபம் ஏது? அங்கம் ஏது? ப்ரமாணம் ஏது? அதிகாரிகள் ஆர்? என்னில்: திருவடியைக் கட்டின ப்ரஹ்மாஸ்த்ரம் சணற்கயிறு காண விட்டுப்போனாப்போலே தன்னையொழிந்த உபாயாந்தரங்களைப் பொறுதொழிகை ஸ்வரூபம். இதரோபாயத்யாகம் அங்கம். ஸகலப்ரமாண ப்ரதிபாத்யனான எம்பெருமான் தானே ''மாமேவ யே ப்ரபத்யந்தே'' என்று அருளிச் செய்கையாலே அது தானே ப்ரமாணம். தானும் பிறரும் தஞ்சமென்றிருக்கும் நன்மைக்கு, எம்பெருமானுக்கு அவ்வருகு இல்லையென்றிருக்கையும், பிறருடைய அர்த்தாப்யுதயங்கள் தன்னதென்றிருக்கையும் இவை தொடக்கமானவை.* அர்த்த ச்ரத்தை பிறந்தபோது தேஹாத்மாபிமானம் போயிற்றில்லையாகக்கடவது. தன்னை யுள்ளபடி ஆராயுமன்றும் பிறருடைய குணாகுண நிரூபணம் பண்ண அவஸரமில்லை; ப்ராப்தியுமில்லை. எம்பெருமானை உள்ளபடி ஆராயுமன்றும் பிறருடைய குணாகுண நிரூபணம் பண்ண அவஸரமில்லை; ப்ராப்தியுமில்லை. சைதன்யம் நடையாடினவன் தன்னைப் பார்த்துத்தளர்தல் எம்பெருமானைப் பார்த்துத் தேறுதல் செய்யுமித்தனை யொழிய பொழுதைப் பழுதே போக்கான். இனி, பிறருடைய குணாகுணநிரூபணம் பண்ணுகிறது, பகவத்ஜ்ஞானம் நெஞ்சிற்படாமையாலே. உணர்த்தியற்றவன் உறங்கு கிறானயிறேயிருப்பது. ''மந ஜ்ஞானே'' என்கிற தாது.

அசித்துக்கும் ஒரு குணமுண்டு. ஈச்வரனுக்கும் ஒரு குணமுண்டு. அசித்து தன்னை அபிமானித்தாரைப் பிறர் காலில் துவளவொட்டாது. தேஹாத்மாபிமானி பிறர் காலில் துவளான். ''ந நமேயம்'' என்றிருக்குமதொழிய எம்பெருமானையாதல், ஸ்ரீவைஷ்ணவர்களையாதல் வணங்கானே. எம்பெருமானும் தன்னை அபிமானித்தாரைப் பிறர் காலில் துவளவொட்டான். திருமந்த்ரநிஷ்டன் அஸத்துக்கள் காலில் வணங்கான். ஆத்மா ப்ரக்ருதியை அண்டைகொண்டு எம்பெருமானை உறுமுதல், எம்பெருமானை

* அதிகாரி ஸ்வரூபம் என்று சேர்த்துக்கொள்ளவேணும்.

அண்டைகொண்டு ப்ரக்ருதியை உறுமுதல் செய்யுமதொழிய ஒன்றில் நில்லாது. ஹிரண்யன் ப்ரக்ருதியை அண்டைகொண்டு எம்பெருமானோடே எதிரிட்டு முடிந்து போனான். ஸ்ரீப்ரஹ்லாதாழ்வான் எம்பெருமானை அண்டைகொண்டு ப்ரக்ருதியை எதிரிட்டு வாழ்ந்துபோனான். ப்ரக்ருதியைச் செறியச்செறிய அந்தகாரம் மிகும். எம்பெருமானைச் செறியச்செறிய வெளிச்செறிப்பு மிகும். ஹிரண்யராவணாதிகள், கைகேயி, கூனி பக்கலிலே காணலாம். த்ரிஜடை, விபீஷணாழ்வான் பக்கலிலேயும் காணலாம். ப்ரக்ருதியினுடைய அஸ்திரத்வாதிதோஷங்களை ஆசார்யன் காட்டக்கண்ட சேதநனுக்கு இவ்வர்த்தம் நெஞ்சிற் படாதாகில் பகவத்ப்ராப்திபளவும் பயங்கெட்டிருக்க விரகில்லை. தேறேலென்னை உன்பொன்னடிச்சேர்த்தொல்லை வேறே போக எஞ்ஞான்றும் விடல்'' என்பது, ''மங்கவொட்டு'' என்பது, 'இங்நின்றநீர்மை' என்பது, 'இது கண்டாய்'' என்பதாய், வழித்தங்கு வல்வினையை மாற்றானோ' என்பதாய், 'நடுவே யோருடம்பிலிட்டு' என்று அஞ்சிக் கூப்பிடா நிற்பர்கள். பகவத்ஸம்பந்தம் பண்ணின பின்பு இவ்வுடம்பைக் கண்டுவைத்து அஞ்சாதே இருந்தவனுடைய ஜ்ஞானத்தை சோதிக்கவடுக்கும்.

ஆத்மா அச்சேத்யனாய், அதாஹ்யனாய், அக்லேத்யனாய், அசோஷ்யனாய், ஸர்வகதனாய், ஜ்ஞானானந்தஸ்வரூபனாய், பகவச்சேஷபூதனாயிருந்துவைத்து ப்ராக்ருத ஸம்பந்தத்தாலே மக்னனாய்க்கொண்டு உருமாய்ந்து 'அஸந்நேவ ஸ பவதி' என்று உண்டாயிருக்கச்செய்தே இல்லாதார் கணக்காய் நின்ற நிலையை ஆசார்யன் காட்டக்கண்ட அனந்தரம் விரோதி கழிந்து ப்ராப்யதேசத்திலே புகுருமளவும், ராக்ஷஸிகள் மத்யையிலிருந்த பிராட்டியுடைய தனியிருப்பைப்போலவும் காலாக்னி மத்யையிலகப்பட்டாரைப் போலவும் ஹாலாஹலவிஷத்தினிடை அகப்பட்டாரைப்போலவும் இதனுடன் பொருந்தாமை தோற்றப் பெருங்கூப்பீடாகக் கூப்பிட்டு இத்தை விடுவிக்கவல்ல மஹா பாகவதர்களான ஸத்துக்களுடைய ஸஹவாஸங்களால் பெற்ற பகவத்க்ருபையாலும், ஸ்வரூபயாதாத்ம்யத்தாலும் வெளிச்செறிப்புப் பிறந்து இவ்விரோதியை விடுவித்துக் கொள்ளுகையிலே த்வரை விஞ்சிச் செல்லா நிற்கும். ''ஜ்ஞாநாந் மோக்ஷ:'' ''அஜ்ஞாநாத் ஸம்ஸார:'' என்கிறது. ஜ்ஞானமாகிறது ஜ்ஞேயமாகிற பகவத்ஸம்பந்தத்தை அறிந்து, ஸம்பந்தத்துக்கு விரோதியான ஸம்ஸாரஸம்பந்தம் பொறாதொழிகையிறே. அஜ்ஞாநாத் ஸம்ஸாரமாகிறது: பகவத்ஸம்பந்தத்துக்கு விரோதியான ப்ராக்ருதிப்ராக்ருதங்களோட்டைச்செறிவு. ஸம்ஸாரம் ஆபத்தென்றபடி. அநாத்மநி ஆத்ம புத்தியும் அஸ்வே ஸ்வம்புத்தியும், கர்மபரம்பரையும் ஸம்ஸாரஹேது. பகவத்ப்ரஸாத பரம்பரை மோக்ஷ ஹேது.

சேதநனுடைய அஹமர்த்தமறியலாவது, தேஹாத்மாபிமானிகளோடொத்த தனக்குத்தான் தேடும் நன்மைகளடையத் தனக்கு நாசமென்றிருக்கை. நஞ்சீயர் ஸ்ரீபாதத்திலேயுடையாரொரு ஸ்ரீவைஷ்ணவர் தம்முடைய அந்திமதசையில் 'இவ்வவஸ்தையில் எனக்குத் தஞ்சமாக நீ வைத்திருக்கலாவது ஏது?' என்று விண்ணப்பம் செய்ய 'இப்போது இந்நினைவும் கூட அறுகை' என்று அருளிச் செய்தார். அதாவது: ஜ்ஞானம் பிறந்த பின்பு ஜ்ஞாநகார்யமான கைங்கர்யம் கைபுகுரும் தேசவிசேஷத்திலே செல்லுமளவும் அறிவு நடையாடின சேதநனுக்கு ஆபத்தென்றபடி. **'ஆத்மநோ துர்தசாபத்திம் விம்ருச்ய ச ஹரேர் குணந்'** என்கிறபடியே. ஆதலால், தன்னுடைய நினைவு மாறினாலல்லது 'ஸ்மராமி'யும் 'நயாமி'யும் பலியாதென்று அருளிச்செய்வர். இவ்வளவு உபாயத்தை ஓடவைத்தது ஏகபதம். உபேயத்தை ஓடவைத்தது மேலில் நமஸ்ஸு. உபாயத்தை நிலையிட்டார்கள், பிராட்டி, த்ரௌபதி, திருக்கண்ணமங்கையாண்டானுள்ளிட்டார்கள். உபேயத்தை நிலையிட்டார்கள், இளையபெருமாள், பெரிய உடையார், சிந்தயந்தி, பிள்ளைதிருநறையூரரையர். எங்ஙனேயென்னில்: **'சீதோ பவ'** என்னவல்லவள் தன்னுடைய தனியிருப்பையும் மாற்ற வல்லளாயிருக்க பெருமாளுடைய வீரத்துக்குக் கொத்தையாமென்று துரும்பு நறுக்காதிருந்தபடியாலும், லஜ்ஜையில்லாத கோஷ்டியிலே, லஜ்ஜையை உடையவன் கையிலே தன்னுடை லஜ்ஜையைப் பொகட்டு நிர்லஜ்ஜையாயிருந்தபடியாலும், தன் பரபரப்பை மாற்று, வகுத்தவன் வாசலிலே தன்னைப்பேணாது ஒதுங்கினபடியாலும், உபாயத்துக்கு ஸீமாபூமி அவர்கள். 'நில்' என்ன **'குருஷ்வ'** என்றபடியாலும், **'அஹம் ஸர்வம் கரிஷ்யாமி'** என்றபடியாலும் **'க்ரியதாமிதி மாம் வத'** என்றபடியாலும், **'லக்ஷ்மணேந கதாம் கதிம்'** என்கிறபடியான ப்ராப்தியாலும், **'ஸஹஜகைங்கர்ய விதய:'** என்கிற அர்த்தம் கைப்பட்டது அவர்க்கேயாகையாலும், பெரிய உடையாரும், சிந்தயந்தியும், பிள்ளைத்திருநறையூரரையரும் வகுத்த விஷயத்தைப் பிரித்துத் தந்தாமுடைய உடம்பைப் பேணாதபடியாலும், வகுத்த விஷயத்தைக் கண்ட மாத்ரத்திலே விரோதியான உடம்பை விடுகையாலும், உபேயத்துக்கு ஸீமாபூமி இவர்கள்.

இதரோபாயத்யாகபூர்வகமாக 'அவனே உபாயமாகவேணும், என்னும் உபேய ப்ரார்த்தனையை **'த்வயம்'** என்கிறது. இவ்வர்த்தம் நெஞ்சில் பட்டவர் பிராட்டியைப் போலே துரும்பு நறுக்காதே ஒழியும். த்ரௌபதியைப்போலே தன்னுடைய லஜ்ஜையைப் பொகட்டிருக்கும். திருக்கண்ணமங்கையாண்டானைப்போலே பரபரப்பற்று வகுத்தவன் வாசலிலே தன்னைப்பேணாது ஒதுங்கும். இளையபெருமாளும், பெரிய வுடையாரும், பிள்ளைதிருநறையூரரையரும், சிந்தயந்தியும் போலே தந்தாமை முடித்தும் ஸ்வரூபமழியாமல் நோக்கி நிற்பர்கள்.

ஆசார்யாங்கீகாரானந்தரத்திலே குருபரம்பரையையும், திருமந்த்ரத்தையும், சரம ச்லோகத்தையும் அநுஸந்தித்து இருந்த இடமறியாமல் தன்னை ஒருங்கவிட்டுக் கொண்டு, தன்னைக் கரையேற்றவல்லனாய், அர்த்தகாமோபஹதனல்லாதானொரு பரம ஸத்வநிஷ்டன் கையிலே தன்னைப் பொகட்டு நிர்ப்பரனாயிருக்கைக்கு மேலில்லை. இவனுக்குப் பரிஹரிக்க வேண்டுவது, தேவதாந்தரபஜநம் பண்ணுவாரோட்டை ஸம்பந்திகளுடைய ஸஹவாஸம் விநாசமென்றஞ்சித் தவிரவும், பகவத்ஸ்வத்தை வருந்தியாகிலும் அபஹரித்து ஜீவியா தொழிகையும், பகவத்ப்ராப்திக்கு விரோதியான விஷயப்ராவண்யம் தன்னை முடிக்குமென்று அஞ்சிப்போரவும், ஆசார்யனளவில் ப்ரக்ருதிப்ராக்ருதங்கள் நிமித்தமாக வரும் அநர்த்தம் பரிஹரித்துப்போரவும், நிலைநின்ற பகவதபசாரம் வருந்தியும் பரிஹரித்துப்போரவும் வேணும்.

''ஓரோரவதாரங்களிற்செய்த ஆனைத்தொழில்களெல்லாம் ஓரோ பாகவதாபசாரம் பண்ணின பலம் அநுபவிப்பிக்கைக்காக'' என்று ஜீயர் அருளிச்செய்வர். நல்லடிக் காலத்தில் நம்மாசார்யர்கள் ஸ்ரீவைஷ்ணவர்களைத் தங்களோபாதி ப்ரக்ருதிமான்களாக நினைத்திருக்கும் புல்லிமையின்றிக்கேயாயிற்று இருப்பது. 'திருவுடைமன்னர்', 'செழுமாமணிகள்', 'நிலத்தேவர்', 'தெள்ளியார்', 'பெருமக்கள்', 'பெருந்தவத்தர்', 'உருவுடையாரிளையார்', 'ஓத்து வல்லார்', 'தக்கார் மிக்கார்', 'வேதம் வல்லார்', 'வேதவிமலர்', 'சிறுமாமனிசர்', 'எம்பிரான்றன சின்னங்கள்' என்று நம் குலநாதரான ஆழ்வார்கள் ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு இப்படித் திருநாமம் சாற்றுகையாலே, கேவலம் தன்னோடொக்க ஒரு மனுஷ்யரென்று ஸ்ரீவைஷ்ணவர்களை நினைத்திருக்கை பாகவதாபசாரம். பகவதபசாரம் பண்ணுகையாவது: எம்பெருமானுடைய நற்சீவனான ஸ்ரீவைஷ்ணவர்கள் திறத்துப் பண்ணுமபசாரம். பாகவதாபசாரம் பண்ணுகையாவது: ஸ்ரீவைஷ்ணவர்களுடைய உயிர்நிலையான எம்பெருமான் திறத்துப் பண்ணுமபசாரம். பாகவதஸம்ச்லேஷம் பகவத்ஸம்ச்லேஷத்தையும் பிறப்பிக்கும். பகவத்ஸம்ச்லேஷம் பாகவதஸம்ச்லேஷம் பர்யந்தமாயல்லது இராது. அபாகவதஸம்ச்லேஷம் பாகவதவிச்லேஷத்தையும் பிறப்பித்து, பகவத்விச்லேஷத்தையும் பிறப்பித்து, இவனையும் முடித்துவிடும். பாகவதஸம்ச்லேஷம் பகவத்ஸம்ச்லேஷத்தையும் பிறப்பித்து, அபாகவதவிச்லேஷத்தையும் பிறப்பித்து இவனையும் எடுத்துக் கரைமரம் சேர்த்துவிடும்.

இவ்வெல்லைமைக்கு ஆசார்யன் கண்வட்டத்திலே வர்த்திக்குமவனுக்கு வாராது. ஆசார்யன் கண்வட்டம் விட்டால், நித்யஸம்ஸாரியாய்ப் போமித்தனை. ஆசார்யனாவான், ஓட்டை ஓடத்தோடே ஒழுகலோடமாய், தன்னைக்கொண்டு முழுகுமவனன்று. தன்னைக் கரையேற்ற வல்லனாய், தன்னையடைந்தாரையும் கரையேற்றவல்லனான ஜ்ஞாநாதி

பரிபூர்ணனு யிருப்பானொருவன். ஆசார்யனுடைய ஜ்ஞானம் வேண்டா சிஷ்யனுக்கு; விக்ரஹமே அமையும். ''கருடத்யானத்தாக்கு விஷம் தீருமாப்போலே ஆசார்யனை த்யானித்திருக்கவே ஸம்ஸாரமாகிற விஷம் தீர்த்துக்கொள்ளலாம்'' என்று அருளிச் செய்வர்கள். ''குரோரரவஜ்ஞயா ம்ருத்யு: மந்த்ராவஜ்ஞா தரித்ரதா, குருமந்த்ரபரித்யாகீ ரௌரவம் நரகம் வ்ரஜேத்'' என்றுமுண்டு.

அத்ருஷ்டமே தஞ்சமென்றிருப்பர்கள் நித்யமுக்தர்கள். த்ருஷ்டமே தஞ்ச மென்றிருப்பர்கள் நித்யஸம்ஸாரிகள். முமுக்ஷுவுக்கு தருஷ்டாத்ருஷ்டங்கள் செல்லா நிற்கச்செய்தே அத்ருஷ்டத்தை மறைபவருவதொரு த்ருஷ்டமுண்டானல், த்ருஷ்டத்தை விட்டு அத்ருஷ்டத்தைப் பற்றுமவன் முமுக்ஷு. அத்ருஷ்டத்தை மறைய வருவதொரு த்ருஷ்டமுண்டானல் அத்ருஷ்டத்தை விட்டு த்ருஷ்டத்தைப் பற்றுமவன் நித்யஸம்ஸாரி இப்போது தன்னுடைய அஹமர்த்தமறியலாவதிவ்விரண்டர்த்தமும், ஒரு எல்லை வந்தாலல்லது காணவொண்ணுது. அல்லாதபோது இருந்ததே குடியாக வென்றிருக்கையும் வைஷ்ணவர்கள் தாங்களும் தங்கள்படியாலே வைஷ்ணவர்களென் றிருக்கவும் ஒருதட்டில்லை.

பரத்வாபஹாரிகள் சைவர். போகாபஹாரிகள் விஷயப்ரவணர். குணாபஹாரி கள் மாயாவாதிகள். தானும் எம்பெருமானும் அறிய வைஷ்ணவத்வமுண்டென்று அறியலாவது, த்யாஜ்யமான சிலவற்றில் வந்தால் தானும் எம்பெருமானும் அறிய நசையற்றிருக்கையும், உபாதேயம் யாதொன்று, அதிலும் வந்தால் தானும் எம்பெருமானும் அறிய நசையுண்டாயிருக்கையும். தேசாந்தரமும், தேஹாந்தரமும் உண்டென்று அறிந்து பயத்தோடே கூடவர்த்திக்க அடுக்கும்.

நம் முதலிகளுக்கு ஒரு மூர்த்திநியதியும், ஒரு மந்த்ரநியதியும் ஓர் ஆசார்ய நியதியும் உண்டு. அவையாவன:— பெருமாளும், த்வயமும், த்வயத்தை முதலடியிலே அருளிச்செய்த மஹோபகாரகனை ஆசார்யனும்.

எம்பெருமான் முதலடியிலே ''க்ஷிபாமி'' என்னும். புருஷகாரத்தை முன்னிட்டவே ''ததாமி'' என்னும். பின்பு ''நயாமி'' என்னும். அவன் ரக்ஷிக்கைக்குப் பரிகரம் ஆர்த்திபல்லதில்லை. இது குறைவற இருவர் ஸ்வரூபமும் குறைவறும். ''படைப்பொடு கெடுப்புக்காப்பவன்'' இத்யாதி. இத்தால் ருசிஜனகன் எம்பெருமானென்னுமத்தையும் ஸ்வவ்யதிரிக்த ஸகலபதார்த்தமும் அவனாலே ஜந்யமென்றும் சொல்லிற்றாயிற்று. ''இடைப்புக்கோர்'' என்கையாலே ஸ்ருஷ்டிஸம்ஹாரங்களுக்கும் ''நான் நான்'' என்கிற ப்ரஹ்மாதிகளன்றியே, மாதாபிதாக்களாக ப்ரமிக்கிறவர்களையும் சொல்லுகிறது.

ஆஹாரத்வாரம் உபாதேயம். விஹாரத்வாரம் த்யாஜ்யம். ஆகையாலே, லஜ்ஜாபுரஸ்ஸர நிவ்ருத்தியைச் சொல்லுகிறது. காலத்துக்கும், கர்மத்துக்கும், வேதத்தில் பூர்வபாகத்திற் சொல்லப்பட்ட நாமத்துக்கும் ப்ரபன்னன் குடிமகனல்லன். "ஆத்மவிச்வாஸமும், அத்யவஸாயமும் உடையராய், க்ருதஜ்ஞராயிருப்பார்க்கல்லது பகவத்விஷயம் சொல்லலாகாது" என்று பலகாலும் அருளிச்செய்வர். ஆசார்ய விச்வாஸமும், அத்யவஸாயமும், தேவதாந்தரபஜனஸம்பந்தமறுகையும், நிலைநின்ற பாகவதாபசாரம் பரிஹரித்துப்போரவும் வேணும். ஆசார்யனுக்கு இவனுபசரிக்குமதாவது:— அவன் தந்த வஸ்துவை நாற்சந்தியிலே வையாதொழிகை. பகவத்ப்ரஸாதம் பாகவதருசியைப் பிறப்பிக்கும். பாகவதருசி ஆசார்யாங்கீகாரத்தைப் பிறப்பிக்கும். ஆசார்யாங்கீகாரம் பகவத்ஸ்வீகாரத்தைப் பிறப்பிக்கும். பகவத்ப்ராப்தி தத்கைங்கர்யத்தைப் பிறப்பிக்கும். தத்கைங்கர்யம் விரோதி நிவ்ருத்தியை அபேக்ஷித்திருக்கும். ஸச்சிஷ்யன் ஸதாசார்யன் பக்கல் பண்ணும் விசதச்ரவணம் "ஸதாபச்யந்தி"க்கே அந்வயிக்கும். இவ்வர்த்தம் ஸதாசார்யன் ஸந்நிதியுண்டாகத் தோற்றும்.

மாணிக்கமாலை முற்றிற்று.

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்.